# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

ஆணை நாள் 04.09.2019

**முன்னிலை**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2366/B/2018**

திரு.V.கருப்பசாமி — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,
திருநெல்வேலி மாவட்டம் — பொது அதிகார அமைப்பு

.

## ஆணை

இவ்வாணையத்தால் இன்று (04.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.V.கருப்பசாமி அவர்கள் ஆணையத்தின் அழைப்பாணை பெற்றுக் கொண்டு எவ்வித முகாந்திரமுமின்றி ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7ன்படி, மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொதுத் தகவல் அலுவலர், திரு.கி.கணேசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம், அவர்கள் பாரத பிரதமர் ஆவாஸ் யோஜனா (PMAY) வீடு வழங்கும் திட்டம் தொடர்பான கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்வதால் அவருக்கு பதிலாக திரு.மா.முத்துக்கிருஷ்ணன் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம் -2), கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 23.08.2017 தேதியிட்ட மனுவில், கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கம்பனேரி முதல்நிலை ஊராட்சியில் 2005-06, 2006-07, 2007-08, 2008-09 மற்றும் 2009-10 நிதியாண்டில் முடிவுற்ற தணிக்கை அறிக்கை

கேட்டு கடையநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் தான் கோரியுள்ள தகவல்களை முழுமையாக பெற்றுத் தருமாறும் தெரிவித்து 02.12.2017 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை கடையநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலகப் மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் 26.03.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 05.12.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல் நேரடியாக வழங்கப்பட்டதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தின் முன்பு சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் மனுதாரார் ஆஜராகி தனக்கு வழங்கப்பட்ட தகவல் குறித்து எவ்வித கருத்தும் தெரிவிக்காதபட்சத்தில் ஆவணங்கள் அடிப்படையில் தகவல் வழங்கப்பட்டுள்ளதாக கருதி, வழக்கின் விசாரணை முற்றாக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 2366/B/2018**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியம்,
திருநெல்வேலி மாவட்டம்

திரு.வே.கருப்பசாமி, த/பெ.வேல்சாமி,
205/3, வடக்குத் தெரு,
பால அருணாசலபுரம்,
கம்பாபச்சேரி (அஞ்சல்),
கடையநல்லூர் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 751

Copy to: File / Stock File
DS/PC 23.09.2019